**தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 10 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது.

(ஆ) சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.3 ஆம் பந்திகளின் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடும் போது அச் சொத்துக்களின் பெறுமதி சொத்துக்களின் தனித்தனியான பெறுமதிகளுடன் பரீட்சிக்கப்பட்டு அப் பெறுமதிகள் இணங்குகின்றன என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் திணைக்களத்தில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களிற்குரிய பிரதான பேரேட்டு மீதியின் பெறுமதி பூச்சியமாக இருந்ததென அரச கணக்குகள் திணைக்களம் குறிப்பிட்டிருந்தால் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்கள் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது. | ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பாக சரியான அறிக்கையொன்று திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் மூலம் பெறப்பட்ட பிரதான பேரேட்டு மீதிகள் திணைக்களத்தின் பிரதான பேரேட்டு மீதிகள் மற்றும் தனிப்பட்ட மீதிகள் என்பவற்றுடன் இணக்கம் செய்யப்பட்டு அதன்மூலம் பதிவேடுகளை பேணுதல் வேண்டும். | நிதியல்லாச் சொத்துக்களிற்குரிய பிரதான பேரேட்டு மீதிகளின் பெறுமதிகள் திறைசேரிப் புத்தகங்களுடன் இணங்காததால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியல்லாச் சொத்துக்களின் பேரேட்டு மீதி பூச்சிய பெறுமதியாக இருந்ததென குறிப்பிடப்பட்ட பின்னர் அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் அவற்றில் சொத்துக்கள் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும், சொத்துக்கள் அனைத்தும் Cigas இற்கு உள்ளடக்கப்பட்டு அதன் மூலம் பேரேடு நாளதுவரையாக்கப்படுகின்றது.. |

| | | |
|---|---|---|
| (ஆ) சுற்றறிக்கையின் 3.4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. (III) இல் காட்டப்பட்ட கடப்பாடுகளும் பொறுப்புக்களும் ரூபா 84,428,666 தொகையாக காணப்பட்ட போதிலும் திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை பூச்சிய பெறுமதியை சுட்டிக்காட்டியிருந்தது. | ஒவ்வொரு செலவின விடயம் தொடர்பான பொறுப்புக்கள் அனைத்தும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. (III) இன் கீழ் சரியாக இனங்காணப்பட வேண்டியதுடன் அப் பொறுப்புக்கள் ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். | கணனிமயப்படுத்தப்பட்ட உரிய பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை தவறுதலாக மாதாந்த கணக்கு பொழிப்புடன் சேர்த்து திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட முடியாதிருந்ததால் அவ் அறிக்கை பூச்சிய பெறுமதியை சுட்டிக்காட்டியிருந்தது. |

**1.6.2 நிலுவையாகவுள்ள வருமானம்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ------------------------------------------------ | ---------------- | ------------------------------------------------ |
| 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிற்குரிய சட்டக் கட்டணங்களிற்காக கூட்டுத்தாபன பிரிவால் ரூபா 103,197,183 கூட்டுமொத்தமான பெறுமதி பட்டியலிடப்பட்டு அவற்றிலிருந்து ரூபா 36,549,689 தொகை அறவிடப்பட்டிருந்ததென கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிலுவை வருமானம் ரூபா 66,647,494 தொகையாக காணப்பட்டது. எனினும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 66,581,244 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 66,250 வேறுபாட்டை சுட்டிக்காட்டுகின்றது. | அறவிடப்பட வேண்டிய வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவையாகவுள்ள வருமானம் ஏதாவது காணப்பட்டால் அவற்றை சுட்டிக்காட்டுவதன் மூலம் அறிக்கைகள் முறையாக பேணப்பட வேண்டும். | நிலுவையாகவுள்ள வருமானத்திற்கிடையேயான வேறுபாடாக காட்டப்பட்ட ரூபா 66,250 தொகை 503142 ஆம் இலக்க காசோலை மூலம் 2018 ஆம் ஆண்டில் நிதிப் பிரிவால் பெறப்பட்டிருந்ததுடன் பெறுவனவுச் சிட்டை வழங்கப்பட்டிருந்தது. எனினும் அப் பெறுமதி தவறுதலாக காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அத் தவறு 2019 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. |

### 1.6.3 பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்த ஆண்டிற்குரிய ரூபா 7,044,183 பெறுமதியான பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு 2019 சனவரியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கீழ் அப் பெறுமதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் உரிய பொறுப்புக்களை சரியாக இனங்காண்பதற்குப் பொருத்தமான முறைமையொன்று பேணப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட அத்தியாவசிய சேவைகளிற்குரிய அவ் விலைப்பட்டியல்கள் 2019 ஆம் ஆண்டின் போது கணக்குப் பிரிவால் பெறப்பட்டிருந்தது. ஆகையால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புக்கள் பதிவேட்டில் அவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | வருடாந்த செயலாற்றல் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு தவறியமை | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு திணைக்களத் தலைவரால் கையொப்பமிடப்படுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு தவறியமை | 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்ந்துவரும் ஆண்டின் மார்ச 17 இற்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானத்தை மதிப்பீடு செய்து சேகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்து அறிக்கையிடுதல் செயன்முறையை முறையாக மீளாய்வு செய்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பெறுப்பாக உள்ள போதிலும் ரூபா 40 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானக் குறியீட்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 64.61 மில்லியன் தொகையானதன் காரணமாக 62 சதவீத மிகையொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீடுகள் யதார்த்தமாக தயாரிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் வருமான மதிப்பீடுகளை தயாரிக்கும் செயன்முறையை தொடர்ச்சியாக பகுப்பாய்வு செய்து, மேற்பார்வை செய்து, மீளாய்வு செய்தல் வேண்டும். மதிப்பீடுகள் யதார்த்தமாக தயாரிக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தின் அறவீட்டிலுள்ள முன்னேற்றம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையேயான வேறுபாடுகளிற்கு பங்களித்திருந்தமையால் வருமான அதிகரிப்பொன்றை காட்டுகின்றது. தங்களின் அவதானிப்பின் பிரகாரம் தொடர்ச்சியான மீளாய்வு மற்றும் மேற்பார்வைக்குட்பட்டு மிகவும் யதார்த்தமாக மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரூபா 103.19 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் 2018 ஆம் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 36.55 மில்லியன் வருமானம் மாத்திரமே மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டு தொடர்பாக அறவிடப்பட முடியாதிருந்த வருமானம் ரூபா 66.65 மில்லியன் தொகையாக அல்லது 64.58 சதவீதமாக காணப்பட்டது. எனினும் நிலுவையாகவுள்ள மொத்த வருமானம் ரூபா 259.37 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தின் துரிதமான அறவீட்டிற்குப் பொருத்தமான முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டும் | நிலுவையாகவுள்ள வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தின் துரிதமான அறவீட்டிற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 01/2015 ஆம் இலக்க அரசிறை கொள்கை சுற்றறிக்கையின் பட்டியல் - | காலாண்டு வருமான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களிற்குச் | காலாண்டு வருமான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் உரிய கோவைகள் |

| | | |
|---|---|---|
| II இன் 1(ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்ட வருமானம் தொடர்பாக அரசிறைக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு காலாண்டு வருமான அறிக்கையொன்றை கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் சமர்ப்பிக்க வேண்டும். எனினும் அத்தகைய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததற்கான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு திணைக்களத் தலைவரினால் கையொப்பமிடுவதற்காக அனுப்பப்பட்டிருந்தது. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் அவரது திணைக்களத்திற்குரிய வரைபு மதிப்பீடுகள் பிரமாணங்களிற்கு இணங்க தயாரிக்கப்படுவதை கவனிப்பது அவரது பொறுப்பாக உள்ள போதிலும் மீளாய்வாண்டிற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 17 மீண்டெழும் செலவின விடயங்களில் 04 செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 6.5 மில்லியன் தொகையான நிதியேற்பாடு 03 சந்தர்ப்பங்களில் 03 ஏனைய மீண்டெழும் செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தன. மேலும் 04 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 35 மில்லியன் நிதியேற்பாடு 03 சந்தர்ப்பங்களில் 04 ஏனைய மீண்டெழும் செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்த அதே நேரம் ரூபா 469.74 மில்லியன் தொகையான மேலதிக நிதியேற்பாடு குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனால் மதிப்பீடுகள் நிதிப்பிரமாண தேவைப்பாடுகளை பூர்த்தி | வருடாந்த மதிப்பீடுகள் சிக்கனம் மற்றும் வீனைத்திறன் தொடர்பாக அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு எதிர்பார்க்கப்படும் சேவைகள் அனைத்தையும் உள்ளடக்கி முறையாக தயாரிக்கப்பட வேண்டும். | புதிய சுற்றறிக்கையால் சட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் அதிகரித்தமை, 211 புதிய நியமனங்களின் ஆட்சேர்ப்பு மூலம் பயிற்சியளித்தல் வாய்ப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, அதற்கிணங்க இணைந்த படிகள், போக்குவரத்துப் படிகள் மற்றும் எரிபொருள் படிகள் அதிகரித்தமை, எதிர்பாராத பராமரிப்பு மற்றும் திருத்த நடவடிக்கைகள் மற்றும் சேவை உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கான தேவைப்பாடு போன்ற காரணங்கள் நிதியேற்பாட்டின் பற்றாக்குறைக்கு வழிவகுத்திருந்தன. தங்களின் அவதானிப்பின் பிரகாரம் எதிர்பார்க்கப்படும் அனைத்து செலவினங்களையும் உள்ளடக்குவதன் மூலம் மிகவும் கவனத்துடன் வருடாந்த மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

செய்வதன் மூலம் யதார்த்தமானதாக தயாரிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ஏற்படுதல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிமாணம் 94(1) இன் பிரகாரம் ஏதாவது திணைக்களத்தினால் வேலை, சேவை அல்லது வழங்கலிற்காக செலவினம் அல்லது கடப்பாடு ஏற்படுத்தப்படக் கூடாததுடன் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவினம் ஏற்பட்ட எந்தவொரு நேரத்திலும் நிதியாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டு தொகைக்குரிய எல்லையை விஞ்சக்கூடாது. எனினும் ஏனைய திணைக்களத்தின் 04 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3.35 மில்லியன் பெறுமதியான நிதியேற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | திணைக்களத்தால் வருடாந்த மதிப்பீடுகளில் வேலை, சேவை அல்லது வழங்கலிற்காக நிதியேற்பாடுகள் காணப்படும் வரை அவற்றிற்காக செலவினம் அல்லது கடப்பாடுகள் ஏற்படுத்தப்படக்கூடாது. | 2018 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு திருத்தம் செய்யப்பட்டிருந்ததால் நிதியேற்பாடுகள் போதாதிருந்தது. இதனால் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் அச் செலவின விடயங்களின் நிதியேற்பாடுகள் விஞ்சப்பட்டிருந்தன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்து கொள்ளும் நோக்கில் திணைக்களத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர், காலரீதியான செயற்பாட்டுத் திட்டம், அமுல்ப்படுத்துவதற்கான கால | 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தங்களின் பரிந்துரைகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நீக்குவதன் மூலம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும். |

எல்லை, எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு/ விளைவு மற்றும் செயற்பாடுகளிற்கான கட்டுநிதித் தேவைப்பாடு போன்ற விடயங்கள் 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அச் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான பிணைகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதித் திணைக்களத்தில் பிணைகள் செலுத்துவதற்கு உரித்துள்ள 04 உத்தியோகத்தர்கள் காணப்பட்ட போதிலும் அவர்கள் பிணைகளை செலுத்தியிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880(i) இன் பிரகாரம் அரச பணத்தை பெற்று பாதுகாத்தல், உறுதிச்சீட்டுக்களை சான்றுறுதிப்படுத்துதல் அல்லது காசோலைகளில் கையொப்பமிடுதல் என்பவற்றிற்காக நிர்வாக ரீதியாக பொறுப்பளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அரச உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச்சட்டத்திற்கு (அத்தியாயம் 612) இணங்க பிணை செலுத்த வேண்டும். | பிணை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் முறையாக கவனம் செலுத்தப்படும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை அரசாங்கத்தின் அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிற்கு அவசியமான அனைத்து சட்ட சேவைகள் மற்றும் அறிவுறுத்தல்களை தாமதமின்றி வழங்குவதன் மூலம் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு அரசாங்கத்தில் முக்கிய சேவையாற்றுகின்ற சிரேஷ்ட மட்டத்தின் 251 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகளை செயற்திறனாக அடைந்துகொள்வதற்கு சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளிற்கு பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு சிரேஷ்ட மட்டத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. |